### அக்டோபர்: 22

## ஆண்டவர் தம் ஆடுகளை குறித்து பேதுருவிடம் பேசுகிறார்.

### வாசிக்க: யோவான் 21:15-19

இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய், நீ முதிர்வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார்.




நம் ஆண்டவர் மூன்றாவது முறையாக தம் சீஷர்களுக்கு தரிசனம் கொடுத்த போது கூறியதையே இன்று தியானிக்க போகிறோம். இரண்டு முறை உயிர்த்தெழுந்த ஆண்டவரை பார்த்த பின்னரும், சீஷர்கள் உள்ளத்தில் இனி என்ன செய்ய வேண்டும் என ஒரு தெளிவான தரிசனம் இல்லாததாலும், பரிசுத்த ஆவியினவரின் ஞானஸ்நானத்தை பெறாததாலும் அவர்கள் தங்கள் பழைய மின்பிடிக்கும் தொழிலையே செய்யலாமென்று தீர்மானித்து கடலுக்கு சென்றனர். ஆனால் அங்கு தோல்வியடைந்தபோது ஆண்டவர் அவர்களை அழைத்து மறுபடியும் மீனையும் அப்பத்தையும் தந்து பேதுருவிடம் பேசி தம் இருதயத்தை வெளிபடுத்தினார். மூன்றுமுறை என்னை நேசிக்கிறாயா என கேட்டு, மூன்றுமுறையும் அப்படியென்றால் என் ஆடுகளை மேய்க்க வேண்டும் என கூறினார். நமக்கு என்ன சொல்கிறாரென்றால் அவரில் அன்பு கூறுபவர்கள் அவர் கட்டளைகளை கைகொள்வதோடு, அவருடைய மற்ற ஆடுகளை குறித்து கரிசனையுள்ளவர்களாக, நேசிப்பவர்களாக இருக்க வேண்டும். உங்களோடு Sunday school ல் படிக்கிற, திருச்சபையில் உள்ள நண்பர்களை அழைத்து ஜெபித்து அவர்களுக்கு ஏதாவது உதவி செய்வாயா..?

யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்;:என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். யோவான் 21:16

## ஜெபம்

பரிசுத்தமுள்ள எங்கள் தகப்பனே, எங்கள் பிரதான மேய்ப்பர் இயேசப்பாவிற்காக நன்றி. அவருடைய பணியை, இதயபாரத்தை நாங்களும் பகிர்ந்து செயல்பட கிருபை தாருமய்யா. இயேசு கிறிஸ்துவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

